# நீரின் மேல் நடக்கும் வித்தை



நீர்மேல் நடக்கும் அதிசயத்தை இதுவரை அற்புத சக்தியாகவே உலகம் வியந்துள்ளது. இதன் இரகசியத்தை ஆராய்ந்த விஞ்ஞானிகள் தங்களது கண்டுபிடிப்பை ஆதாரபூர்வமாக நிருபித்துள்ளார்கள்.

கொரியாவைச் சேர்ந்த ஹோ யுங் கிம் அவர்களும் டக் கியு லீ என்பவரும் நடத்திய பல சோதனைகள் மூலம், நீரின்மேல் நடக்கக் கூடிய இப்பிரமிக்கத் தக்க சக்தி எவ்வாறு உருவாக்கப்படுகிறதுஎன்பதை ஊர்ஜிதம் செய்துள்ளனர்.

நீரின்மேல் நடக்கும் சில பிராணிகளின் கால்கள் அதற்கு உகந்த வகையில் அமைந்திருப்பதை அவதானித்த ஆராய்ச்சியாளர்கள் அதேபோன்று வடிவமைத்த ரோபோக்கள் எதுவித சிரமமின்றி நீரின் மேல் நடந்து செல்வதை அவதானித்துள்ளனர்.

இந்த முறையின் மூலம் மனிதர்களும் நீரின் மேல் நடக்க முடியும் என்று உறுதியாக நம்பும் இவர்கள் அது தொடர்பான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

குறுகிய தூர கடல்வெளியைக் கடக்கவோ ஆறுகளில் அடுத்த கரையை அடையவோ இனிமேல் படகுகள் தேவைப்படும் அவசியம் இல்லாமல் போகும் நேரம் நெருங்கி வருகிறது

### பொருளாதார முற்றுகை விலகிய பின்னால்...

அமெரிக்காவின் பொருளாதார முற்றுகைக்குள் முடங்கிக் கிடக்கும் கியூபா, அதன் தடைகள் நீங்கிய பின்னர், அதன் மூலவயங்களை எவ்வாறு பாதுகாக்க முடியுமென, சுற்றுச் சூழல் ஆராய்ச்சியாளர்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

1962ம் ஆண்டு தொடக்கம் பொருளாதார முற்றுகைக்குள் சிக்கியுள்ள கியூபா, அதன் தற்போதைய தலைமைத்துவம் மாறுமானால் அமெரிக்காவின் கெடுபிடிகள் நீங்கக் கூடுமென பொருளாதார நிபுனர்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

கியூபாவின் வளங்களான மலைகள், அடர்ந்த காடுகள், நீர்த்தேக்கங்கள், அழகிய கடற்கரைகள், கடல்சூழ்ந்த வளங்கள், தாவர வகைகள் மற்றும் மிருக வளர்ப்பு, வேறு எங்கும் காணமுடியாத அரும் பொக்கிஷங்கள்.

இதன் உன்னத பலன்களை கியூபா அனுபவிக்க முடியாது தடைசெய்யப்பட்ட பொருளாதார முற்றுகை, கியூபாவின் முன்னேற்றத்தை பாரியளவில் தேங்க வைத்தது ஏகாதிபத்திய நாடான அமெரிக்காவின் ஓரவஞ்சகச் செயல் என்பதில் ஐயமில்லை.

சோவியத் ஒன்றியத்தின் அனுசரணையுடன் ஓரளவுதாக்குப்பிடித்த கியூபா, அமெரிக்காவின் அநீதிச் செயல்களால் 1991ல் நிர்மூலமான சோவியத் ஒன்றியத்தின் பக்கபலம் நீங்கியபின் மேலும் வலுவிழந்து போவது உலகம் அறிந்ததே.

இத்தனை கெடுபிடிக்கும் மத்தியில், பென்னம் பெரிய நாடான அமெரிக்காவின் அருகில் சிறிய ஒரு நாடான கியூபா தலைநிமிர்ந்து நிற்க அதன் ஆத்ம பலம்தான் அரும்பெரும் சக்தியாக பரிணமித்ததை எவரும் மறுக்க முடியாது.

தாவரவகை எண்ணெயை உற்பத்தி செய்யும் ஒரு முக்கிய நாடாகவும் அதிகளவில் வைத்திய நிபுனர்களை உருவாக்கும் ஒரு பெரிய நாடாகவும் திகழ்வது, அந்நாட்டு மக்களின் சுதந்திர தாகமும், ஒன்றுபட்ட ஒத்துழைப்பு மென்பது வெள்ளிடை மலை.

## தகவல் களஞ்சியம்

சுவாசிப்பவர்: **உமா மகாலிங்கம்**

இதுபோன்ற ஒரு சூழ்நிலையில்தான் இன்று ஈழத்தமிழ்மக்கள் இலங்கையில் முற்றுகையிடப்பட்டுள்ளனர்.

கியூபா நாட்டு மக்களைப் போன்று, ஈழத்தமிழ்மக்கள் ஒருமித்து உழைத்தால், ஈழவள நாட்டின் அரும் பொக்கிஷங்களான கடல்வளம், அழகிய கடற்கறைகள், நெருங்கிய காடுகள், பொன்னையொத்த சிவந்த மண், கற்பக தருவான பனைமரம், கரும்புச் செய்கைபண்ணை வளமான விளைநிலம், காகித உற்பத்தி போன்ற அரிய வளங்களை பேணிவளர்கிது பொருளாதார முற்றுகை நீங்குவது அவசியம். காலம் வரும் காத்திருப்போம்.

### பற்றேறியின் பாவனையில் அதிகரிக்கும் சாதனை

லப்டொப் பாவனையில் உலகம் ஊறிக் கிடக்கும் இவ்வேளையில் அதற்குத் தேவைப் படும் மின்சக்தி மிகக்குறைந்தளவில்தான் லீத்தியும் அணுக்கள் மூலம் பெறமுடிகிறது.

இதன் காரணமாக அடிக்கொருதரம் பற்றெறியின் மின்சக்தி பெற இணைக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் லப்டொப் பாவனை யாளரகளுக்கு உண்டு.



இச்சங்கடத்தை தீர்க்குமுகமாக ஸ்டான் போர்ட் யுனிவசிட்டி, கலிப்போர்னியாவைச் சேர்ந்த விஞ்ஞானியீ குவி என்பவர் நேர்துருவச் சக்தி மூலம் மின்சக்தியைச் சேகரிக்க முயன்று வெற்றியும் அடைந்துள்ளார்.

இவருடைய கண்டுபிடிப்பு ஏற்றுக் கொள்ளப் படுமானால், தற்போதைய பாவனையிலுள்ள பற்றறிக்குப் பதிலாகப் பத்துமடங்கு அதிக சக்தியைப் பெறும் வாய்ப்பு உண்டாகும்.

எனவே லப்டொப் பாவனையாளர்கள் 40 மணித்தியாலத்துக்கு ஒரு முறை மின்சக்தி பெறும் இனைப்பை ஏற்படுத்த வகை செய்யப்படும்.

இப்புதிய முறையிலான தயாரிப்புகள் சந்தைக்கு வரச் சில தடைகள் தாண்ட வேண்டியிருப்பதால் பாவனையாளர்கள் பொறுமையுடன் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

## பிரித்தானிய சைவத்திருக் கோவில்கள் ஒன்றியம்.

### விடுக்கும் அறிவித்தல்

சிவ விரதங்கள் எட்டு: அவற்றுள் சிவராத்திரி ஒன்று. இது மாசி மாதம் கிருஷ்ணபட்சம், சதுர்த்தசி திதியன்று வருவது.

ஒரு விளக்கம் பின்வருமாறு,

பிரமனும் திருமாலும் நான் பிரமம், நான் பிரமம் என்று தருக்கமிட்டுப் போர் புரிந்தனர். அவரகள் இடையே அடி, முடி காணமாட்டாமல் ஒரு தாணுசோதி மயமாய் நின்றது.

அப்படி தோன்றிய நாள்தான் சிவராத்திரி. பிரமதேவனும் திருமாலும் துதிக்க அவர்கள் முன்னர் அத்தாணுவில் சிவமூர்த்தி மாலயனாதி வானவர் யாவர்க்கும் திருவருள் புரிந்தனர்.

இப்படி தோன்றி அருளிய நேரம் இரவு 14 நாழிகைக்கு மேல் என உணர்க. இக் காலம் தான் இலிங்கேஸ்வர காலம் என்ற 14 நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்த காலத்தில் சில பஞ்சாக்கரம் ஜெபிப்போர் எண்ணற்ற நன்மைகள் பெறுவர்.

## இந்த இரவு ஆங்கில திகதி மார்ச் 6 வியாழன் இரவு

மேல் கூறப்பட்டுள்ள தீர்மானம் சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம் ஏக மனதாக எடுக்கப்பட்ட தீர்மானம் என அறியத் தருகிறேன்.

க.ரங்கநாதன்
செயலாளர்.

# சிவராத்திரி

# 06.03.2008